# SHAKTHII ACADEMY

Increasing Confidence ; Reaching Goals

10th Biology

1.________கோட்பாடு அண்டத்தின் தோற்றத்தை விளக்குகிறது.

விடை: பெருவெடிப்பு

2.பூமி தோன்றி எத்தனை மில்லியன் ஆண்டுகளுக்குப் பின் உயிரினங்கள் தோன்றின?

விடை: 500

3.விலங்குகளின் உடலில் உள்ள உரு வளர்ச்சி குன்றிய மற்றும் இயங்காத நிலையில் உள்ள உறுப்புகள் _______உறுப்புகள் என அழைக்கப்படுகின்றன.

விடை: எச்ச உறுப்புகள்

4.புதைப்படிவங்கள் பற்றிய அறிவியல் பிரிவு_____எனப்படுகிறது.

விடை: தொல்லுயிரியல்

5.தொல்லுயிரியலின் தந்தை என அழைக்கப்படுபவர்?

விடை: லியோனார்டோ டாவின்சி

Shakthii



**Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249**

6.______என்பது பழங்காலப் புதைபடிவப் பறவை. இது ஜூராசிக் காலத்தில் வாழ்ந்த முற்காலப் பறவை போன்ற உயிரினம்.

விடை: ஆர்க்கியாப்டெரிக்ஸ்

7.__________என்பது கால மாற்றத்திற்கு ஏற்ப உயிரினங்களில் படிப்படியாகத் தோன்றிய மாற்றங்கள் ஆகும்.

விடை: பரிணாமம்

8.தொல்தாவரவியல் என்ற சொல் எந்த மொழியிலிருந்து உருவாக்கப்பட்டது?

விடை:கிரேக்கம்

குறிப்பு: Palaeon (தொல்) என்னும் சொல்லின் பொருள் தொன்மையான எனவும்,Botany (தாவரவியல்) என்னும் சொல் தாவரங்களைப் பற்றிப் படிக்கும் அறிவியல் எனவும் பொருள் தரும்.

9.தொல் தாவரவியலின் தந்தை என அழைக்கப்படுபவர்______

விடை: கஸ்பர் மரியா வான் ஸ்டெர்ன்பெர்க்

10.இந்திய தொல் தாவரவியலின் தந்தை _______

விடை: பீர்பால் சகனி

Shakthii

11.வாழும் தொல் உயிர்ப் படிவங்களுக்கு எடுத்துக்காட்டு____

விடை: ஜிங்கோ பைலோபா

12.படிவங்களின் வயதினை அவற்றில் உள்ள ______தனிமங்களால் கண்டுபிடிக்கலாம்.

விடை: கதிரியக்கத் தனிமங்களால்

13.கதிரியக்க கார்பன் முறையைக் கண்டுபிடித்தவர்_____

விடை:W.F. லிபி

14.புவி அமைப்புக் கால அளவை என்பது என்ன?

விடை: பாறை அடுக்குகளின் அமைப்பினைக் கால வரிசைப்படி அறிந்து கொள்ளும் முறை ஆகும்.

15.கல்மரப் படிவப் பூங்கா தமிழ்நாட்டில் எங்கு உள்ளது?

விடை: திருவக்கரை, விழுப்புரம் மாவட்டம்

குறிப்பு: இரண்டாயிரம் மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தாவரத் தண்டுப் பகுதியானது ஆற்றங்கரையில் மண்ணில் புதையுண்டு காலப்போக்கில் அதில் உள்ள கரிமப் பொருள்கள் சிலிகாவினால் நிரப்பப்பட்டுப் படிவமாகியுள்ளது.

Shakthii

16.ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள தாவரங்கள் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வழி வழியாக எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பற்றி அறிவது____

விடை: வட்டார இனத் தாவரவியல்

குறிப்பு : இயற்கை அறிவியலின் ஒரு பகுதி வட்டார இனத் தாவரவியல்.

17.அண்ட வெளியில் உள்ள உயிரினங்களைப் பற்றி அறியும் அறிவியலுக்கு ________என்று பெயர்.

விடை: வான் உயிரியல்

18.நாசா 2020இல் வான் உயிரியல் என்னும் திட்டத்தை உருவாக்கி எந்த கோளில் பழமையான சூழல் குறித்தும், உயிரிகள் இருந்தனவா என்பது குறித்தும் ஆய்வு செய்து வருகிறது?

விடை: செவ்வாய்

19.சுற்று வட்டப்பதையானது சூரியனிலிருந்து சரியான தொலைவில் இருந்தால் நீர்த் துளிகள் இருக்கும்.இந்த தொலைவானது அதிக வெப்பமும் இல்லாமல்,அதிக குளிரும் இல்லாத அளவிலான தொலைவாக இருந்தால் அங்கு உயிரினங்கள் வாழ உகந்த சூழல் இருக்கும். இதை _______என்று கூறுவர்.

விடை: கோல்டிலாக் மண்டலம்



Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249

Shakthii

20.கோல்டிலாக் மண்டலத்தில் உள்ள கோள்______

விடை: பூமி

21.எது தொல்பொருள் வல்லுநர்களின் ஆய்விற்குப் பயன்படுகிறது?

விடை: தொல் உயிரியல் சான்றுகள்

22.தொல் உயிர்ப் படிவங்களின் காலத்தை அறிய உதவும் தற்போதைய முறை______

விடை: ரேடியோ கார்பன் முறை

23.வட்டார இன தாவரவியல் எனும் சொல்லை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்_____

விடை:J.W. கார்ஸ் பெர்கர்

24. பரிணாமத்தின் இயற்கைத் தேர்வு கோட்பாட்டை முன்மொழிந்தவர் __________.

விடை: சார்லஸ் டார்வின்

25.வௌவால்கள் மற்றும் மனிதனின் முன்னங்கால்கள் ______ உறுப்புகளுக்கு எடுத்துக்காட்டுகள்.

Shakthii



**Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249**

விடை: அமைப்பு ஒத்த

................................................................................

1.பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக ________எந்த சட்டத்தை அறிமுகப்படுத்தியது?

விடை: போக்சோ

2.போக்சோ சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ?

விடை: 2012

3.POCSO - என்பதன் விரிவாக்கம் என்ன?

விடை : Protection of Children from Sexual Offences

4.மருந்துகளின் தவறான பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தல் மீதான சர்வதேச நாள் _____

விடை: ஜூன் 26

5.போதையூட்டும் மருந்துகள் மற்றும் மனோவியல் மருந்துகள் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?

விடை: 1985

Shakthii

6.எந்த நிறுவனம் 1984 ஆம் ஆண்டு மருந்துகளின் போதை (அடிமையாதல்) அல்லது மருந்துகளின் தவறான பயன்பாடு என்ற வார்த்தைக்குப் பதிலாக மருந்துகளை சார்ந்திருத்தல் என்ற வார்த்தையைப் பயன்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளது?

விடை: உலக சுகாதார நிறுவனம்

WHO - WORLD HEALTH ORGANISATION

7.புகையிலை எந்த புகையிலைத் தாவரங்களிலிருந்து பெறப்படுகிறது?

விடை: நிக்கோட்டியானா டொபாக்கம் மற்றும் நிக்கோட்டியானா ரஸ்டிகா

8.புகையிலைக்கு ஒருவர் அடிமையாதலை ஏற்படுத்துவது____

விடை: நிக்கோட்டின் என்னும் அல்கலாய்டு

9.புகைப்பிடித்தலின் போது வெளிப்படும் புகையில் உள்ள _______மற்றும் _______எனும் புற்றுநோய்க் காரணிகள், நுரையீரல் புற்றுநோயை உண்டாக்குகின்றன.

விடை: பென்சோபைரின் மற்றும் பாலிசைக்ளிக் ஹைட்ரோகார்பன்கள்

Shakthii

10.புகைப்பிடித்தலின்போது உண்டாகும் புகையில் உள்ள ______இரத்த சிவப்பணுவில் உள்ள பிணைப்பை ஏற்படுத்தி அதன் ஆக்சிஜன் எடுத்துச் செல்லும் திறனை குறைக்கிறது.

விடை: கார்பன் - மோனாக்சைடு

11.உலக சுகாதார நிறுவனம் போதை என்ற வார்த்தையை பயன்படுத்த எந்த ஆண்டு ஆலோசனை வழங்கியது?

விடை:1984

12. WHO வெளியிட்ட உத்தரவின்படி அனைத்து சிகரெட் விளம்பரங்களிலும் மற்றும் அட்டை பெட்டிகளிலும் ______என்ற சட்டரீதியான எச்சரிக்கை இடம்பெற்றிருக்க வேண்டும்.

விடை: புகை பிடித்தல் உடல் நலத்திற்கு தீங்கானது

13.உலக புகையிலை எதிர்ப்பு நாள் ?

விடை: மே 31

குறிப்பு : புகையிலை எதிர்ப்புச் சட்டம் மே 1, 2004 இல் கொண்டு வரப்பட்டது.

14.________ஒரு நாள்பட்ட வளர்சிதை மாற்றக் கோளாறாகும்.

விடை: டயாபடீஸ் மெல்லிடஸ் (நீரிழிவு)

(கிரேக்கத்தில் டயாபடீஸ் - ஓடுகின்ற : மெல்லிடஸ் இனிப்பு என்று பொருள்படும்)

Shakthii

15.கணையத்தில் உள்ள பீட்டா செல்கள் அழிவதன் காரணமாக ஏற்படும் நோய் _______

விடை: இன்சுலின் சார்ந்த நீரிழிவு நோஊ (IDDM)

IDDM - Insulin Dependent Diabetes Melitus

16.ஹைபர்கிளைசீமியா என்பது ?

விடை: போதுமான அளவு இன்சுலின் சுரக்காமல் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகரிப்பது.

17.இன்சுலின் சாராத நீரிழிவு நோய் ____ எனவும் அழைக்கப்படுகிறது.

விடை: வயதானோரின் நீரிழிவு நோய்

18.இந்தியாவில் எட்டு பேரில் ஒருவர் _____நோயாளி ஆவார்.

விடை: நீரிழிவு

19.நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான சராசரி வயது____

விடை: 40

20.பாலியூரியா என்பது______

விடை: அதிகளவு சிறுநீர் வெளியேறுதல்

21.இரத்த சர்க்கரை அளவை குறைப்பதில் கரையாத நார்ச்சத்து கொண்ட என்னென்ன உணவுப்பொருள்கள் உதவுகின்றன?

விடை: ஆளி விதைகள்,கொய்யா , தக்காளி மற்றும் கீரைகள்

22.நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் _____முக்கிய பங்கு வகிக்கிறது.

விடை: உடற்பயிற்சி

23.உடலில் கொழுப்பு அளவு மற்றும் நலம் சார்ந்த ஆபத்தினை ___________கொண்டு அளவிடலாம்.

விடை: உடற்பருமக் குறியீட்டைக் (BMI)

BMI = எடை (கிகி) / உயரம் (மீ$^2$)

24.அளவுக்கதிகமாக உண்ணுகின்ற ஒவ்வொரு 7 கலோரி உணவிலும் _____ கொழுப்பு உடலில் சேகரமாகிறது.

விடை: 1கி

25.இந்தியர்களின் இரத்தத்தில் இருக்க வேண்டிய விரும்பத்தக்க கொழுப்பின் அளவானது ______ஆகும்.

விடை: 200 மிகி/டெசிலி

Shakthii

26.இரத்தத்தில் கொழுப்பின் அளவு _____லிருந்து ______ஆக அதிகரிக்கும் போது இதயக் குழல் (கரோனரி இதய நோய்) நோய்க்கான ஆபத்தும் அதிகரிக்கிறது.

விடை: 200, 300 மிகி/டெசிலி

27.இதய நோய்க்கான ஆபத்தை குறைப்பது _____

விடை: அதிக அடர்த்தி கொண்ட லிப்போபுரதம் அல்லது நல்ல கொலஸ்ட்ரால்.

28.புற்றுநோயைப் பற்றிய படிப்புக்கு ______என்று பெயர்.

விடை: ஆன்காலஜி (ஆன்கோ - கட்டி)

29.புற்றுநோய் என்ற சொல்லுக்கு இலத்தீன் மொழியில் _______ என்று பொருள்.

விடை: நண்டு

30.உலக புற்றுநோய் நாள் _____

விடை: பிப்ரவரி 4

குறிப்பு : தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள் - நவம்பர் 7.

Shakthii

Part 3

1.புற்றுநோயை உண்டாக்கும் காரணிகள் ______அல்லது புற்றுநோய்க் காரணிகள் என்றழைக்கப்படுகின்றன.

விடை: கார்சினோஜென்கள்

2.புற்றுநோயை உண்டாக்கும் வைரஸ்கள் ______எனப்படும்.

விடை: ஆன்கோஜெனிக் வைரஸ்கள்

3.புகைபிடித்தலைத் தவிர்ப்பதால் _______ புற்றுநோயைத் தடுக்கலாம்.

விடை: நுரையீரல்

4.இந்தியாவின் __________HIV ஆராய்ச்சி மற்றும் சிகிச்சையின் முன்னோடி ஆவார்.

விடை: டாக்டர் சுனிதி சால்மோன்

குறிப்பு : இந்தியாவின் முதல் எய்ட்ஸ் நோயாளி சென்னையைச் சேர்ந்தவர்.

5.உலக எய்ட்ஸ் தினம் ?

விடை: டிசம்பர் 1

Shakthii

6.புகையிலை மற்றும் அட்ரீனலின் சுரப்பைத் தூண்டுகிறது. இதற்கு காரணமான காரணி ________

விடை: நிக்கோடின்

7.நிணநீர் முடிச்சுகள் மற்றும் மண்ணீரலைத் தாக்கும் புற்றுநோய் வகை_____

விடை: லிம்போமா

8.அளவுக்கு மிஞ்சிய மதுப்பழக்கத்தினால் உருவாது______

விடை: கல்லீரல் சிதைவு

9.இதயக்குழல் இதய நோய் ஏற்படக்காரணம் ______

விடை: இதய தசைகளுக்கு போதிய இரத்தம் செல்லாமை

10.எபிதீலிய செல்லில் புற்றுநோய் உருவாகக் காரணம்______

விடை: வீரியமிக்க கட்டி (மாலிக்னண்ட்)

11.பாலிபேஜியா என்ற நிலை ______இல் காணப்படுகிறது.

விடை: டயாபடீஸ் மெல்லிடஸ்

12.வெள்ளையணுக்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பது_____



Shakthii

விடை: லுயூக்கேமியா

13.நோயின் காரணங்கள் பற்றி அறிய உதவும் அறிவியல் பிரிவு ______எனப்படுகிறது.

விடை : நோய்க்காரண ஆய்வு (ஏட்டியாலஜி)

14.______மயக்கமூட்டி வகை மருந்து.

விடை: நிக்கோடின்

15.பாலிடிப்சியா என்பது ____

விடை: அதிகப்படியான தாகம்

16.பாலிபேஜியா என்பது ________

விடை : அதிகப்படியான பசி

17.__________அதிகம் பயன்படுத்தினால் கல்லீரலில் சிர்ரோஸிஸ் நோய் ஏற்படுகிறது.

விடை: ஆல்கஹால்

Shakthii

18.1973 ஆம் ஆண்டில் அகிம்சா வழியில் மரங்களையும் காடுகளையும் பாதுகாப்பதற்காக துவக்கப்பட்ட இயக்கம் _____

விடை: சிப்கோ

19.சிப்கோ என்னும் வார்த்தையின் பொருள்_____

விடை: தழுவுதல்

20.1936 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இந்தியாவின் முதல் தேசிய பூங்கா______

விடை: ஜிம் கார்பெட் தேசிய பூங்கா உத்ரகாண்ட்

21.இந்தியாவில் தற்போது உள்ள உயிர்க்கோள காப்பகங்களின் எண்ணிக்கை_____

விடை: 15

22.தமிழ்நாட்டில் உள்ள எந்த பகுதி ஒரு பாதுகாக்கப்பட்ட உயிர்க்கோளக் காப்பக பகுதியாகும்.

விடை: நீலக்கிரி பகுதி

23.வன உயிரி பாதுகாப்புச் சட்டம் எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது?

விடை: 1972

Shakthii

24.இந்தியாவின் முதல் பெண் வன உயிரி புகைப்படக் கலைஞர் என்று சர்வதேச அளவில் புகழ் பெற்ற ராதிகா ராமசாமி தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்?

விடை: தேனி

25.இந்திய காண்டாமிருகங்கள் பாதுகாப்பு திட்டம் எந்த ஆண்டு துவக்கப்பட்டது?

விடை: 2020

குறிப்பு : அசாமில் உள்ள காண்டாமிருகங்களை பாதுகாக்க கொண்டு வரப்பட்டது.

26.புலிகள் பாதுகாப்புத் திட்டம் துவங்கப்பட்டது?

விடை: 1973

குறிப்பு : யானைகள் பாதுகாப்புத் திட்டம் 1992 ,முதலைகள் பாதுகாப்புத் திட்டம் 1976 ,கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம் 1999 ஆண்டிலும் கொண்டு வரப்பட்டது.

27.தம்மைத் தாமே புதுப்பித்துக் கொள்ள முடியாத ஆற்றலுக்கு உதாரணம்_____

விடை: நிலக்கரி, பெட்ரோலியம்,இயற்கை வாயு மற்றும் அணுக்கரு ஆற்றல்



Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249

28.புதுப்பிக்கத்தக்க அல்லது தீர்ந்துபோகாத ஆற்றல் வளங்களுக்கு சில உதாரணம் ______

விடை: புவி வெப்ப ஆற்றல், நீராற்றல் ,சூரிய ஆற்றல் , காற்றாற்றல்

29.அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக உலக அளவில் கச்சா எண்ணெய் பயன்படுத்தும் மூன்றாவது பெரிய நாடு _____

விடை: இந்தியா

30.அனல்மின் நிலையங்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்யப்பயன்படுவது?

விடை: நிலக்கரி

குறிப்பு : நிலக்கரி மற்றும் பெட்ரோலியம் இயற்கை வளங்கள் ஆகும்.

31.தாஜ்மஹாலின் வெண்ணிற பளிங்கு கற்கள் மஞ்சள் நிறமாக மாறுவதற்கு காரணம் அதன் அருகில் உள்ள இந்திய அரசுக்கு சொந்தமான மதுரா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து உற்பத்தி ஆகும் ______.

விடை: சல்ஃபர் மற்றும் நைட்ரஜன் ஆக்சைடுகள்

32.சூரிய ஒளியை மின்னாற்றலாக மாற்றும் திறன் கொண்டவை_____

விடை: சிலிக்கானால் உற்பத்தி செய்யப்பட்ட சூரிய மின்கலன்கள்



Shakthii

33.100 சூரிய வெப்ப சூடேற்றிகள் மூலம் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு யூனிட் மின்சாரத்தை சேமிக்க முடியும்?

விடை: 1500 யூனிட்

34.உயிரி வாயு என்பது எதன் கலவையாகும்?

விடை: மீத்தேன் (75%), ஹைட்ரஜன் சல்பைட் ,கார்பன் டை ஆக்ஸைடு மற்றும் ஹைட்ரஜன் சேர்ந்த கலவையாகும்.

35.உலகின் மிக உயரமானதும் ,மிகப் பெரியதுமான காற்றாலை எங்கு உள்ளது?

விடை: ஹவாய் பகுதியில்

36.ஒரு காற்றாலையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தினை எத்தனை வீடுகளுக்கு பயன்படுத்த முடியும்?

விடை: 300

37.பூமியின் அடிப்புறத்தில் அமைந்துள்ள சேறு மற்றும் தாதுக்கள் அடங்கிய மென்மையான பாறை அடுக்குகளுக்கு இடையே உள்ள வாயு?

விடை: ஷேல் வாயு

38.உலகின் நான்காவது பழமையான அணை ?



Shakthii

விடை: 2 ஆம் நூற்றாண்டில் கரிகால சோழனால் காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட கல்லணை ஆகும்.

39.கழிவுகளை சிறப்பான முறையில் கையாளுவதற்கு 4R முறை ஏற்றதாகும். இதில் 4R என்பது_____

விடை: Reduce , Reuse ,Recovery, Recycle

40.ஒத ஆற்றல் ஒரு ________ஆற்றல்.

விடை: புதுப்பிக்கத்தக்க

41.வாகனங்கள் வெளியேற்றும் புகையிலுள்ள வாயுக்கள்____

விடை: கார்பன் மோனாக்சைடு,சல்பர் டை ஆக்சைடு,நைட்ரஜன் ஆக்சைடு

42.பசுமை இல்ல விளைவு என குறிப்பிடப்படுவது____

விடை: பூமி வெப்பமாதல்

Part 4

1.ஹார்மன் என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து ஹார்மோன் என்னும் சொல் உருவாகியது. இதன் பொருள்______



Shakthii

விடை: கிளர்ச்சி

2.தாவரங்களில் குறைவான செறிவில் உற்பத்தி செய்யப்படும் கரிம மூலக்கூறுகளே ________ஆகும்.

விடை: தாவர ஹார்மோன்கள்

3.தாவரங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் தாவர ஹார்மோன்கள்______

விடை: ஆக்சின்கள்,சைட்டோகைனின்கள் மற்றும் ஜிப்ரல்லின்கள்

4.தாவரங்களின் வளர்ச்சியை தடை செய்யும் தாவர ஹார்மோன்கள்_____

விடை:அப்சிசிக் அமிலம் மற்றும் எத்திலின்

5.தாவர ஹார்மோன்களில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது?

விடை: ஆக்சின்கள்

குறிப்பு: ஆக்சின்கள் என்ற சொல்லை கால் மற்றும் ஹாஜன் ஸ்மித் (1931) அறிமுகம் செய்தனர்.

6.தாவரத்தில் முளைக்குருத்து உருளையானது ஒளியின் திசையை நோக்கி வளர்வதையும்,வளைவதையும் கண்டறிந்தவர்______

விடை: சார்லஸ் டார்வின்



Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249

Shakthii

7.ஆக்சின் என்பதன் பொருள்____

விடை: வளர்ச்சி

8.தாவரங்களால் உருவாக்கப்படும் இயற்கை ஆக்சின்களுக்கு எடுத்துக்காட்டு______

விடை: இண்டோல் 3 அசிட்டிக் அமிலம் (IAA)

9.செயற்கை ஆக்சின்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு___

விடை: 2,4 D (2,4 டைகுளோரோ பீனாக்சி அசிட்டிக் அமிலம்)

10.சைட்டோகைனின் அதிகமாகக் காணப்படுவது____?

விடை: தேங்காயின் இளநீரில்

11.சியாட்டின் என்பது?

விடை: சியா மெய்ஸ் (மக்காச்சோளம்) தாவரத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சைட்டோகைனின் ஆகும்.

12.சைட்டோகைனின்களைப் பயன்படுத்தும்போது தாவரங்கள் முதுமையடைவது தாமதப்படுத்தப்படுகிறது. இதற்கு _____விளைவு என்று பெயர்.

Shakthii

விடை: ரிச்மாண்ட் லாங்க் விளைவு

13.அதிக அளவு காணப்படும் தாவர ஹார்மோன்கள்________

விடை: ஜிப்ரல்லின்

14.தாவரங்களின் மீது ஜிப்ரல்லினைத் தெளிக்கும்போது அது கணுவிடைப்பகுதியின் அசாதாரண நீட்சியைத் தூண்டுகிறது. இதற்கு எடுத்துக்காட்டு_____

விடை: மக்காச்சோளம் மற்றும் பட்டாணி

15.தாவரங்களின் பசுங்கணிகங்களில் உள்ள ஹார்மோன்_____

விடை: அப்சிசிக் அமிலம் (ABA)

16. இலைகள்,மலர்கள் மற்றும் கனிகள் ஆகியவை கிளையிலிருந்து தனித்து உதிர்ந்து விடுவதை ஊக்குவிக்கும் ஹார்மோன்?

விடை: அப்சிசிக் அமிலம்(ABA)

17.வாயு நிலையில் உள்ள தாவர ஹார்மோன்____

விடை: எத்திலின்

Shakthii

(குறிப்பு : கனிகள் பழுப்பதை ஊக்குவிக்கிறது. எ.கா. தக்காளி, ஆப்பிள்,மா,வாழை)

18.விலங்கினங்களில் உள்ள இருவகையான சுரப்பிகள்_____

விடை: நாளமுள்ள மற்றும் நாளமில்லாச் சுரப்பிகள்

19.நாளமில்லாச் சுரப்பி மண்டலம் மற்றும் அதன் செயல்பாடுகளைப் பற்றிய உயிரியல் பிரிவு________

விடை: எண்டோகிரைனாலாஜி

20.நாளமில்லாச் சுரப்பி மண்டலத்தின் தந்தை _____

விடை: தாமஸ் அடிசன்

21.முதன் முதலில் கண்டறிந்த ஹார்மோன்____

விடை: செக்ரிடின்

22. பெரும்பாலான முதுகெலும்பிகளில் பிட்யூட்டரி சுரப்பி ஒரு முதன்மையான சுரப்பி ஆகும்.இது பிற நாளமில்லாச் சுரப்பிகளை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துவதால்_______என்றும் அழைக்கப்படுகிறது.

விடை: தலைமை சுரப்பி

Shakthii

23.தசைகள், குருத்தெலும்பு மற்றும் எலும்புகளின் வளர்ச்சியைத் தூண்டும் ஹார்மோன்_____

விடை: வளர்ச்சி ஹார்மோன் (GH)

24.மெலட்டோனின் என்னும் ஹார்மோன் பீனியல் சுரப்பியில் சுரக்கிறது.இந்த ஹார்மோன் _______என்றும் அழைக்கப்படுகிறது.

விடை: காலத் தூதுவர்கள்

25.உடல் முழுமைக்கும் இரவு நேரத்தினை உணர்த்தும் ஹார்மோன்____

விடை: மெலட்டோனின்

26.எந்த ஹார்மோனின் உற்பத்தி குறைவதால் இயற்கையான உறக்கச் சுழற்சி பாதிக்கப்படுகிறது?

விடை: மெலட்டோனின்

27.சிறுநீர் மூலம் வெளியேற்றபடும் நீர் இழப்பைக் குறைக்கும் ஹார்மோனின் பெயர்______

விடை:வாசோபிரஸ்ஸின் அல்லது ஆண்டிடையூரிட்டிக் ஹார்மோன்

28.தைராய்டு ஹார்மோன் உற்பத்திக்கு காரணமாக அமைவது?

விடை: டைரோசின் என்னும் அமினோ அமிலமும் , அயோடினும்

Shakthii

29.பெண்களின் குழந்தைப்பேற்றின் போது கருப்பையை சுருக்கியும்,விரிவடையச் செய்தும்,குழந்தைப்பேற்றுக்கு பிறகு பால் சுரப்பிகளில் பாலை வெளியேற்றுவதற்கும் காரணமாக அமைவது____

விடை: ஆக்ஸிடோசின்

30. தைராய்டு சுரப்பி எங்கு அமைந்துள்ளது?

விடை: மூச்சுக் குழலின் இருபுறமும் இரண்டு கதுப்புகளாக அமைந்துள்ளது. இவ்விரண்டு கதுப்புகளும் இஸ்துமஸ் என்னும் மெல்லிய திசுக் கற்றையால் இணைக்கப்பட்டுள்ளன.

---

Part 5

1.ஆளுமை ஹார்மோன் என்று அழைக்கப்படுவது?

விடை: தைராய்டு ஹார்மோன்

2.ஒவ்வொரு நாளும் தைராய்டு சுரப்பியானது தைராக்சினை சுரக்க ______அயோடின் தேவைப்படுகிறது.

விடை: 120µg

Shakthii

3.உணவில் தேவையான அளவு அயோடின் இல்லாததால் கழுத்துப்பகுதியில் குறிப்பிடத்தக்க அளவு தைராய்டு சுரப்பி வீங்கி காணப்படுவது _____

விடை: எளிய காய்டர்

4.குழந்தைகளில் குறைவான தைராய்டு சுரப்பால் ஏற்படுவது____

விடை: கிரிட்டினிசம்

5.கிரிட்டன்கள் என்று அழைக்கப்படுபவர்கள்?

விடை: கிரிட்டினிசத்தின் அறிகுறிகள் உள்ளவர்களை

(குறிப்பு: குள்ளத்தன்மை, குறைவான மனவளர்ச்சி, குறைபாடான எலும்புகள் வளர்ச்சி உள்ளவர்களை கிரிட்டன்கள் என்று அழைப்பர்.

6.தைராய்டு ஹார்மோன்கள் அதிகமாக சுரப்பதால் ஏற்படுவது_____

விடை: கிரேவின் நோய் (எக்ஸாப்தல்மிக் காய்டர்)

7.கிரேவின் நோயின் அறிகுறிகள்______

விடை: மிகை உடல் வெப்பநிலை, துருத்திய கண்கள்,மிகையாக வியர்த்தல், உடல் எடை குறைவு, நரம்புத் தளர்ச்சி

8.கணையம் எந்த நிறத்தில் காணப்படும்?

விடை: மஞ்சள்



Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249

9.உணவு செரித்தலில் முக்கிய பங்காற்றுவது?

விடை: கணைய நீர்

10.நீரிழிவு நோயைக் குணப்படுத்துவதற்காக இன்சுலின் முதன் முதலில் பயன்படுத்தப்பட்ட ஆண்டு?

விடை: ஜனவரி 11, 1922

11.இன்சுலின் ஹார்மோனை சுரக்கும் செல்கள் _____

விடை: பீட்டா செல்கள்

12.செல்லுக்குள் குளுக்கோஸ் செல்வதை ஊக்குவித்து ,இரத்தத்தில் குளுக்கோஸ் அளவைக் குறைப்பது_____

விடை: இன்சுலின்

13.இன்சுலின் சுரப்பில் குறைபாடு ஏற்படுவதால் உண்டாவது ____

விடை: டயாபடீஸ் மெலிடஸ்

14.இன்சுலின் குறைபாட்டின் அறிகுறிகள்_____

Shakthii

விடை: அடிக்கடி சிறுநீர் கழித்தல், அடிக்கடி தாகம் எடுத்தல் , அடிக்கடி பசி எடுத்தல், இரத்த சர்க்கரை அளவு அதிகரித்தல் மற்றும் சிறுநீரில் அதிகப்படியான குளுக்கோஸ் வெளியேறுதல்.

15.சிறுநீரகத்தின் மேற்புறம் அமைந்த சுரப்பி?

விடை: அட்ரினல்

குறிப்பு : இவை சிறுநீரக மேற்சுரப்பி என்றும் அழைக்கப்படுகிறது.

16.சிறுநீரகத்தின் வெளிப்புற பகுதி _______உட்புற பகுதி_____

விடை: அட்ரினல் கார்டெக்ஸ் , அட்ரினல் மெடுல்லா

17.உயிர் காக்கும் ஹார்மோன் என்பது_____

விடை: அட்ரினல் கார்டெக்ஸ் சுரக்கும் கார்ட்டிசோல் ஹார்மோன்

18.மிகுந்த பாதிப்பு மற்றும் மன அழுத்தத்திலிருந்து மீண்டு வர உதவும் ஹார்மோன்______

விடை: கார்ட்டிசோல் ஹார்மோன்

19.அவசர கால ஹார்மோன் என்பது _____

Shakthii

விடை: அட்ரினல் மெடுல்லா சுரக்கும் அட்ரினலின் (எபிநெ்ப்ரின்) மற்றும் நார் அட்ரினலின் (நார்எபிநெ்ப்ரின்)

20.அவசர கால ஹார்மோன் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

விடை: சண்டை, பயமுறுத்தும் அல்லது பறக்கும் ஹார்மோன்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

(குறிப்பு: இவை மன அழுத்தம் மற்றும் உணர்ச்சி வயப்படும் காலங்களில் உற்பத்தியாகின்றன.)

21.தைமோசின் என்ற ஹார்மோனைச் சுரப்பது?

விடை: தைமஸ்

22.கரும்பில் உற்பத்தியாகும் சர்க்கரையின் அளவை அதிகரிக்க அவற்றின் மீது _____தெளிக்கப்படுகிறது.

விடை: எத்திலின்

23.மனிதர்களிலும் , பிறமுதுகெலும்பிகளிலும் காணப்படும் நாளமில்லாச் சுரப்பி_______

விடை: பிட்யூட்டரி சுரப்பி,தைராய்டு சுரப்பி,பாரா தைராய்டு சுரப்பி, கணையம், அட்ரினல் சுரப்பி,இனப்பெருக்க சுரப்பிகள், தைமஸ் சுரப்பி.

Shakthii

24.நாளமுள்ள சுரப்பியாகவும், நாளமில்லாச் சுரப்பியாகவும் செயல்படுவது?

விடை: கணையம்

25.நாளமுள்ள சுரப்பிகள் _______

விடை: உமிழ் நீர் சுரப்பிகள், பால்சுரப்பிகள்,வியர்வை சுரப்பிகள்

---

Part 6

1.மரபணுக்கள், மரபியல் மாற்றம் மற்றும் உயிரிகளில் பாரம்பரியமாதல் பற்றிப் படிக்கும் அறிவியல் ______

விடை: மரபியல்

2.ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு பண்புகள் கடத்தப்படுவது______

விடை:பாரம்பரியம்

3.மரபியலில் அடிப்படைத் தத்துவங்களை தனது சோதனை மூலம் கண்டறிந்தவர்______

விடை: மெண்டல் என்ற ஆஸ்திரிய துறவி

Shakthii

4.மரபியலின் குரோமோசோம்களின் பங்கு பற்றிய கண்டுபிடிப்பிற்கான நோபல் பரிசு 1993 ஆம் ஆண்டு யாருக்கு வழங்கப்பட்டது?

விடை: T.H.மோகன்

5.மனித உடல் பல மில்லியன் செல்களால் ஆனது. ஒவ்வொரு செல்லின் உட்கருவிலும் ________என அழைக்கப்படும் மெல்லிய நூல் போன்ற அமைப்புகள் உள்ளன.

விடை: குரோமோசோம்கள்

6.________இன் போது ஜீன்களில் உள்ள மரபுப் பொருட்கள் அடுத்தடுத்த தலைமுறைக்கு கடத்தப்படுகின்றன.

விடை: செல் பிரிதலின் போது

7.ஒவ்வொரு செல்லின் முதுமையை உணர்த்தும் கடிகாரங்களாச் செயல்படுவது_____

விடை: டீலோமியர்கள்

8.உடல் பண்புகளை நிர்ணயிக்கும் ஜீன்களைப் பெற்றுள்ளவை _____

விடை: ஆட்டோசோம்கள் அல்லது உடல் குரோமோசோம்கள்

9.ஓர் உயிரியின் பாலினத்தை நிர்ணயிக்கும் குரோமோசோம்கள் ______



Shakthii

விடை: அல்லோசோம்கள்

குறிப்பு : பால் குரோமோசோம்கள் அல்லது ஹெட்டிரோசோம்கள்

10.குரோமோசோம்கள் என்ற சொல்லை முதன் முதலில் உருவாக்கி பயன்படுத்தியவர்_____

விடை: வால்டேயர்

11.மனித செல்லில் பொதுவாக _______ஜோடி குரோமோசோம்கள் உள்ளன.

விடை: 23

குறிப்பு : இதில் 22 ஜோடி ஆட்டோசோம்கள் மற்றும் 23-வது அல்லோசோம்கள்

12.பெண்கள் இரண்டு _____குரோமோசோம்களைப் பெற்றுள்ளனர்.

விடை: X

குறிப்பு : ஆண்கள் ஒரு X குரோமோசோமையும் ,ஒரு Y குரோமோசோமையும் பெற்றுள்ளனர்.

13.ஓர் உயிரினத்தில் செல் உட்கருவில் உள்ள குரோமோசோம்களின் எண்ணிக்கை , அளவு மற்றும் வடிவம் _____எனப்படுகிறது.

விடை: கேரியோடைப்


Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249

Shakthii

14.மரபுத் தகவல்களை உள்ளடக்கிய பாரம்பரிய பொருள் ____

விடை: டி.என்.ஏ

15.______என்பது மில்லியன் கணக்கான நியூக்ளியோடைடுகளை உள்ளடக்கிய மிகப்பெரிய மூலக்கூறு ஆகும்.

விடை: டி.என்.ஏ

குறிப்பு : இது பாலிநியூக்ளியோடைடு எனவும் அழைக்கப்படுகிறது.

16.குரோமோசோம் அமைப்பு அல்லது எண்ணிக்கையில் ஏற்படும் திடீர் மாற்றம் _____என அழைக்கப்படுகிறது.

விடை: குரோமோசோம் சடுதிமாற்றம்

17.ஒற்றை ஜீனில் ஏற்படும் திடீர் மாற்றத்தால் _______இரத்தசோகை நோய் ஏற்படுகிறது.

விடை: கதிர் அரிவாள்

18.மெண்டல் தனது ஆய்விற்கு பயன்படுத்தியச் செடி______

விடை: பட்டாணி

Shakthii

19.தந்தை உருவாக்கும் _____குழந்தையின் பாலினத்தை நிர்ணயிக்கிறது.குழந்தையின் பாலினத்தை நிர்ணயிப்பதில் தாய்க்கு எந்த விதப் பங்கும் இல்லை.

விடை: விந்தணுவே

20.டி.என்.ஏ வின் முதுகெலும்பாக உள்ளது?

விடை: சர்க்கரை பாஸ்பேட்

21.வாட்சன்,கிரிக் மற்றும் வில்கின்ஸ் ஆகியோரின் ____ஆய்வுக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது.

விடை: நியூக்ளிக் அமிலங்களின் மூலக்கூறு அமைப்பு

22.செல்பகுப்படையும் போது ஸ்பிண்டில் நார்கள் குரோமோசோமுடன் இணையும் பகுதி____

விடை: சென்ட்ரோமியர்

23.சென்ரோமியர் மையத்தில் காணப்படுவது______

விடை: மெட்டாசென்ரிக்

24.டவுன் நோய்க்கூட்டு அறிகுறி என்பது ____குரோமோசோமில் ஒரு கூடுதல் நகல் குரோமோசோம் உள்ள மரபியல் நிலை ஆகும்

விடை: 21



Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249

Shakthii

குறிப்பு: டவுன்நோய்க்கூட்டு அறிகுறி: மனவளர்ச்சி குறைபாடு,தாமதமான வளர்ச்சி,பார்வை மற்றும் கேட்டல் குறைபாடு, பலவீனமான தசை அமைப்பு,நடத்தை சார்ந்த பிரச்சனைகள்.

25.ஒரு டி.என்.ஏ இரண்டு _____இழைகளால் ஆனது.

விடை: பாலிநியுக்ளியோடைடு

........................................................................................................................

**Video Class Available Link :**

**https://shakthiiacademy.com/online-classes-for-you/**

**Subscribe Our Youtube Channel :**

**“Shakthii Academy”**

For Direct Class : Call / Whatsapp : 9884 2222 49

Shakthii

Shakthii